# குறள் கூறும் நட்பு

திருக்குறள் அறநூல்களில் மிகவும் சிறந்தது. இது மாந்தர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைப் பற்றிச் சிறப்பாகக் கூறுகிறது. திருக்குறள் அனைவருக்கும் பொதுவான ஒழுக்கங்களைக் கூறுவதால் இதனைப் ‘**பொதுமறை**’ என்றும் கூறுவர். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு அன்புகொள்வது நட்பாகும். இந்த நட்பைப்பற்றித் திருவள்ளுவர் பல குறள்களில் கூறியிருக்கிறார். நாம் உடுத்தியிருக்கும் உடையானது நழுவும் போது எமதுகை தாமாகவே விரைந்து அதைப் பிடித்துக்கொள்கிறது. அதைப்போலவே நண்பர்களுக்குத் துன்பம் நேரும்போது விரைந்து சென்று உதவ வேண்டும் என்று வள்ளுவர் உண்மை நட்பின் உயர்வைக் கூறியிருக்கிறார். மேலும் நல்ல நூல்களைப் படிக்கப்படிக்க நற்கருத்துகள் தோன்றும். அதுபோல நல்ல பண்புடையோருடன் பழகப்பழக அந்நட்பு மனதுக்கு இனிமை தரும். அதுபோலவே சிரித்துப் பேசி மகிழ்வது மட்டும் நட்பல்ல. நண்பர்கள் தவறு செய்யும் போது அதனைத் தடுத்து நிறுத்தி நல்ல அறிவுரை கூறுவதே இனிய நட்பாகும் என்பதை வள்ளுவர் நகுதற் பொருட்டன்று... என்று தொடங்கும் குறள் மூலம் அழகாக விளக்குகின்றார். இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்து இருப்பதே உண்மையான நட்பாகும். இதை நமது பண்டைத் தமிழ் இலக்கியங்களும் நூல்களும் கூறுகின்றன.